# மாகாணக் கல்வித் திணைக்களம் வடக்கு மாகாணம்.

## க.பொ.த (சா/த) பரீட்சை

## நாடகமும் அரங்கியலும்
## செய்முறைப் பயிற்சிப் பரீட்சை II - 2017

### வினாத்தாள் - 01

**1. கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் – 1 செய்முறை**

அ) இயல்பான அசைவு ஒன்றைச் செய்து அதனை ஆக்கியல் அசைவாக உருவாக்கிக் காட்டுக. அதனை ஆசிரியர் வழங்கும் தாளத்திற்கு ஏற்ப ஆடுக.

ஆ) ஊமச் சித்திரிப்பிற்குரிய பயிற்சியாக அமையக் கூடிய அரங்க விளையாட்டை விளையாடும் முறையை எடுத்துக் கூறி, சக மாணவர்களுடன் விளையாடுக.

இ) சிறுவர் நாடகம் ஒன்றில் பாத்திரமாகத் தோன்றக்கூடிய பிராணிப் பாத்திரம் ஒன்றைச் சித்திரித்துக் காட்டுக.

ஈ) பற்பசை விளம்பரம் ஒன்றில் நடிக்கும் பாத்திரமாக சித்திரித்துக் காட்டுக.

உ) பளு தூக்கும் வீரன் அல்லது சிலம்பாட்ட (கம்பு சுற்றும்) வீரனைப் போலச் செய்து காட்டுக.

**கணிப்பீடு நியதிகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | லயம் | - | 04 புள்ளிகள் |
| 2. | ஊமச் சித்திரிப்பு | - | 04 புள்ளிகள் |
| 3. | பாத்திரச் சித்திரிப்பு | - | 04 புள்ளிகள் |
| 4. | அரங்க விளையாட்டு | - | 04 புள்ளிகள் |
| 5. | புதிதளித்தல் | - | 04 புள்ளிகள் |
| | **மொத்தம்** | | 20 புள்ளிகள் |

**02. கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் – 2 செய்முறை**

புதியதொரு வீடு நாடகத்தில் வருகின்ற தொடக்கப்பாடலான - சிறுநண்டு மணல் மீது ....... என்ற பாடலிற்கு ஆடற்கோலத்தை உருவாக்கி குழுக்களாக ஆற்றுகை செய்து காட்டுக. (குழுச்செயற்பாடு)

**பின்வரும் பாத்திரத்தை தனியாகச் சித்திரித்துக் காட்டுக.**

மாயன் :- (மாயன் புகுதல்) இந்த இடமோ புதிதாய் இருக்கிறது.......... (தொடக்கம்) ............ அம்மா நான் மாயன், அரியக்குட்டி பெற்ற மகன் .......... (வரையுள்ள பகுதி)
(பின்னனி உரையாடல்கள், சத்தங்கள் ஏனைய மாணவர்களால் வழங்கப்படலாம். அல்லது அவை இல்லாது சித்திரித்துக் காட்டலாம்.)

**பின்வரும் பகுதியைக் குழுவாகச் சித்திரித்துக் காட்டுக.**

மறைக்காடர் : (புகுந்து) மயிலியே? .............
- தொடக்கம் -
மயிலி - மாசிலன் உதவிதானே..........
- வரையான பகுதி (பக். 28)

**கணிப்பீட்டுப் புள்ளிகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | உடல்தளர் நிலை | - | 04 புள்ளிகள் |
| 2. | குரல் வெளிப்பாடு | - | 04 புள்ளிகள் |
| 3. | பாத்திரச் சித்திரிப்பு | - | 04 புள்ளிகள் |
| 4. | வெளிப் பயன்பாடு | - | 04 புள்ளிகள் |
| 5. | படைப்பாக்கம் | - | 04 புள்ளிகள் |
| | | | 20 புள்ளிகள் |

## 03. கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் – 3 ஆக்கச் செயற்பாடு

1) நீர் கற்ற நாடக எழுத்துருவில் உள்ள விருப்பமான பாத்திரம் ஒன்றிற்குரிய வேட உடையின் மதிரியை துணிகளால் / கடதாசியால் வடிவமைத்து ஒட்டிக் காட்டுக.

2) இச் செயற்பாடு தொடர்பான பரீட்சகரின் வினாக்கள் இரண்டிற்கு பதில் கூறுக.

3) ஆரொடு நோகேன் நாடகத்தின் மூன்றாவது குடும்பத்திற்கான காட்சியமைப்பை செய்து காட்டுக.
(3 மாணவர்கள் ஈடுபடுக. வகுப்பறைத் தளபாடங்களைப் பயன்படுத்துக. தளபாடங்களையே வெவ்வேறு பொருட்களாகப் பயன்படுத்தலாம் - பொருளிற்குரிய பெயர்களை எழுதித் தொங்க விடுக. படச்சட்ட மேடைப் பிரிவுகளை கருத்திலெடுத்துச் செயற்படுக.

**கணிப்பீட்டு நியதிகள் :-**

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆக்கச் செயற்பாடு | - | 04 புள்ளிகள் |
| 2. | வேட உடையின் பொருத்தப்பாடு | - | 04 புள்ளிகள் |
| 3. | விடைகள் | - | 04 புள்ளிகள் |
| 4. | காட்சியமைப்பு | - | 04 புள்ளிகள |
| 5. | மேடைப் பயன்பாடு | - | 04 புள்ளிகள |
| | **மொத்தம்** | | 20 புள்ளிகள் |

## கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் – 04 ஆக்கச் செயற்பாடு

அ) நீர் வாழ்க்கையில் கண்ட ஒரு பாத்திரத்தைத் தெரிவு செய்க.

ஆ) அப்பாத்திரத்திற்கேற்ற வேட உடை, ஒப்பனைகளை கலைநயத்தோடு மேற்கொள்க.

இ) அப்பாத்திரத்தைப் போலச் செய்து காட்டுக.

கணிப்பீட்டு நியதிகள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | வேட உடையின் பொருத்தப்பாடு | - | 04 புள்ளிகள் |
| 2. | ஒப்பனையின் பொருத்தப்பாடு | - | 04 புள்ளிகள் |
| 3. | உடல்வழிச் சித்திரிப்பு | - | 04 புள்ளிகள் |
| 4. | குரல் வழிச் சித்திரிப்பு | - | 04 புள்ளிகள் |
| 5. | உணர்ச்சிவழிச் சித்திரிப்பு | - | 04 புள்ளிகள் |
| | **மொத்தம்** | | 20 புள்ளிகள் |

## 05. கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் – 5 கேட்டல்

உமக்குத் தெரிந்த இசைநாடகப் பாடல் / கூத்துப்பாடல் ஒன்றைப் பாடி நடித்துக் காட்டுக.

**கணிப்பீட்டு நியதி**

| | | | |
|---|---|---|---|
| 1) | பாடும், ஆடும் திறன் | - | 04 புள்ளிகள் |
| 2) | தாளம் | - | 04 புள்ளிகள் |
| 3) | குரல், உடல் வெளிப்பாடு | - | 04 புள்ளிகள் |
| 4) | வெளியைப் பயன்படுத்தல் ஆட்டமுறமை | - | 04 புள்ளிகள் |
| 5) | பாத்திர வெளிப்பாடு | - | 04 புள்ளிகள் |
| | **மொத்தம்** | | 20 புள்ளிகள் |

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்.
## க.பொ.த (சா/த) பரீட்சை

## நாடகமும் அரங்கியலும்
## செய்முறைப் பயிற்சிப் பரீட்சை II - 2017

### வினாத்தாள் - 02

**கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் – 01**

அ) பரீட்சகரால் கூறப்பெறும் / ஒலிக்கவிடப் பெறும் தாளக்கட்டினை / இசையை உள்வாங்கி அத்தாளத்திற்கமைய அசைந்தவாறு உடற்பயிற்சிக்குரிய அரங்க விளையாட்டு ஒன்றினை விளையாடுக.

| | | |
|---|---|---|
| 1. தெரிவு செய்யப் பெற்ற அரங்க விளையாட்டின் பொருத்தப்பாடு | - | 04 புள்ளிகள் |
| 2. இசைக்கேற்ற அசைவு | - | 04 புள்ளிகள் |
| 3. விதிமுறையை பின்பற்றி விளையாடுதல் | - | 04 புள்ளிகள் |
| 4. உடற்தளர்நிலை | - | 04 புள்ளிகள் |
| 5. கூட்டுணர்வு | - | 04 புள்ளிகள் |
| **மொத்தம்** | - | 20 புள்ளிகள் |

**கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் – 02**

அ) பரீட்சகரால் வழங்கப்பெறும் சிறுகதையை வாசியுங்கள் (தற்கால வாழ்வியலுக்குப் பொருத்தமான)

ஆ) அதில் வரும் சம்பவங்களையும், பாத்திரங்களையும் பட்டியற்படுத்துங்கள்

இ) அதில் ஒரு சம்பவத்தை படச் சட்ட மேடையில் ஆற்றுவதற்கேற்ற எழுத்துரு ஒன்றினைத் தயார் செய்யுங்கள்.

**கணிப்பீட்டு நியதிகள்**

| | | |
|---|---|---|
| 1. சம்பவங்களையும் பாத்திரங்களையும் இனங்காணுதல் | - | 04 புள்ளிகள் |
| 2. நாடகத்தின் தொனி வெளிப்படுதல் | - | 04 புள்ளிகள் |
| 3. சொல்லாடல்களின் பொருத்தப்பாடு | - | 04 புள்ளிகள் |
| 4. கற்பனையும் படைப்பாக்கமும் | - | 04 புள்ளிகள் |
| 5. ஆற்றுகைக்கேற்ற தன்மை / மேடைக்குறிப்புக்கள் | - | 04 புள்ளிகள் |
| **மொத்தம்** | - | 20 புள்ளிகள் |

**கணிப்பீட்டச் சந்தர்ப்பம் – 03**

அ) கூத்துப்பாடல் (பாடத்திட்டத்துள் அடக்கப்பெற்ற ஒன்றினை) பாடி ஆடி நடித்துக் காட்டுக.

ஆ) இசை நாடகப்பாடல் அன்றேல் நவீன நாடகப் பாடல் ஒன்றினை (பாடத்துள் உள்ளடக்கப்பெற்ற) பாடி நடித்துக் காட்டுக.

**கணிப்பீட்டு நியதிகள்**

| | | |
|---|---|---|
| 1. பாடும் திறன் / ஆடும் திறன் | - | 04 புள்ளிகள் |
| 2. பாத்திர வெளிப்பாடு | - | 04 புள்ளிகள் |
| 3. வெளியைப் பயன்படுத்துதல் | - | 04 புள்ளிகள் |
| 4. கற்பனையும் படைப்பாக்கமும் | - | 04 புள்ளிகள் |
| 5. புறத்தெறிதல் | - | 04 புள்ளிகள் |
| **மொத்தம்** | - | 20 புள்ளிகள் |

## கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் – 04

*குழந்தை ம.சண்முகலிங்கத்தின் ஆரோடு நோகேன் அன்றேல் மகாகவி உருத்திரமூர்த்தியின் புதியதொரு வீடு எழுத்துருக்களில் இருந்து ஒரு பகுதியைத் தெரிவுசெய்து சகபரீட்சாத்திகளின் உதவியுடன், வாசிப்பு அரங்க உத்திகளைப் பயன்படுத்தி வாசித்துக் காட்டுக.*

**கணிப்பீட்டு நியதிகள்**

| | | | |
|---|---|---|---|
| *1.* | *வாசிப்பு நுட்பங்கள்* | - | *04 புள்ளிகள்* |
| *2.* | *குரல் ஏற்ற இறக்கம் / தொனி வேறுபாடு* | - | *04 புள்ளிகள்* |
| *3.* | *உணர்ச்சி வெளிப்பாடு* | - | *04 புள்ளிகள்* |
| *4.* | *பாத்திர வெளிப்பாடு* | - | *04 புள்ளிகள்* |
| *5.* | *படைப்பாக்கத்திறன்* | - | *04 புள்ளிகள்* |
| | **மொத்தம்** | - | *20 புள்ளிகள்* |

## கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் – 05

*குறித்தொதுக்கப் பெற்ற நாடக பாடங்களில் இருந்து தங்களால் தெரிவு செய்யப்பெறும் பாத்திரம் ஒன்றிற்கு வேடப்புனைவு, ஒப்பனையினை மேற்கொள்க.*
*(உடை மாற்றுதல் தவிர்ந்த ஏனைய செயற்பாடுகள் பரீட்சகர் முன்பாக மேற்கொள்ளப் பெறுதல் வேண்டும்)*

**கணிப்பீட்டு நியதிகள்**

| | | | |
|---|---|---|---|
| *1.* | *வேட உடையின் பொருத்தப்பாடு* | - | *04 புள்ளிகள்* |
| *2.* | *ஒப்பனையின் பொருத்தப்பாடு* | - | *04 புள்ளிகள்* |
| *3.* | *ஒப்பனைப் பொருள்களை பயன்படுத்தும் முறை* | - | *04 புள்ளிகள்* |
| *4.* | *வேட உடை ஒப்பனைக்கிடையிலான ஒத்த தன்மை* | - | *04 புள்ளிகள்* |
| *5.* | *பாத்திர முன்வைப்பு* | - | *04 புள்ளிகள்* |
| | **மொத்தம்** | - | *20 புள்ளிகள* |

The National e-learning Portal for General Education

**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்.**

**க.பொ.த (சா/த) பரீட்சை**

# நாடகமும் அரங்கியலும்
# செய்முறைப் பயிற்சிப் பரீட்சை II - 2017

## வினாத்தாள் - 03

**கணிப்பீட்டுச் சந்தர்ப்பம் – 01 செய்முறை**

01. ✧ கீழே தரப்படும் சூழமைவுகளில் ஒன்றினைத் தெரிந்தெடுத்து குழுவாக ஊமச் சித்திரிப்பை மேற்கொள்ளுங்கள்.

1) மழைக்காட்சி
2) மலையேறுதல்
3) தேர்தல் பிரசாரம்

✧ ஆசிரியர் வழங்கும் ஒரு பொருளினைப் பயன்படுத்தி, சூழமைவு ஒன்றைத் தனிச் செயற்பாடாக முன்வைக்குக.

✧ மேற்படி சித்திரிப்புக்கள் தொடர்பில் கீழ்வரும் வினாக்களுக்கு வாய்வழிப் பதில்கள் வழங்குக.

✧ நீர் மேற்கொண்ட ஊமச் செயற்பாட்டுக்காக மேற்கொள்ளக்கூடிய பயிற்சிகள் எவை.

நீர் மேற்க்கொண்ட ஊமச் செயற்பாட்டை வார்ச்சீக அபிநயப் பயன்பாட்டுடன் சித்திரிக்குக.

**கணிப்பீட்டு நியதிகள்**

| | | |
|---|---|---|
| 1) கற்பனையும் படைப்பாக்கமும் | - | 04 புள்ளிகள் |
| 2) வெளிப்படும் செய்தியும் | - | 04 புள்ளிகள் |
| 3) நடிப்பு நுட்பங்கள் | - | 04 புள்ளிகள் |
| 4) உணர்வும், தொனியும் | - | 04 புள்ளிகள் |
| 5) வாய்வழிப் பதில்கள் | - | 04 புள்ளிகள் |
| **மொத்தம்** | - | 20 புள்ளிகள் |

**செய்முறை – 02**

02. அ) புதியதொரு வீடு எனும் நாடகத்திலுள்ள சூழலமைவுகளை பட்டியற்படுத்துக.
ஆ) மாயன் எனும் பாத்திரம் ஊருக்குள் பல வருடங்களின் பின்வரும் பகுதியினை தனியாளாகச் சித்திரித்துக் காட்டுங்கள்.
இ) சித்திரிப்பித் தொடர்பில் வினவப் பெறும் வினாக்களுக்கு விடையளிக்குக.

✧ குறித்த சம்பவத்திலுள்ள உணர்வுகள் எவை?
மாயன் என்ற பாத்திரத்திற்கு எத்தகைய வேடஉடை ஒப்பனையை மேற்கொள்வீர்

**கணிப்பீட்டு நியதிகள்**

| | | |
|---|---|---|
| 1) சித்திரிப்பு முறை | - | 04 புள்ளிகள் |
| 2) கற்பனையும், படைப்பாக்கமும் | - | 04 புள்ளிகள் |
| 3) உணர்வு வெளிப்பாடு | - | 04 புள்ளிகள் |
| 4) தொனியும் ஏற்ற இறக்கமும் | - | 04 புள்ளிகள் |
| 5) வாய்வழிப் பதில்கள் | - | 04 புள்ளிகள் |
| **மொத்தம்** | - | 20 புள்ளிகள் |

**செய்முறை – 03**

அ) A4 தாள்கள் அல்லது துணிகளைப் பயன்படுத்தி மரபுவழி நாடகமென்றிற்கான வேட உடையினைத் தயாரிக்குக.

அல்லது

பாடசாலைச் சூழலில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு காட்சிவிதானிப்பொன்றை மேற்கொள்ளுங்கள்.

**கணிப்பீட்டு நியதிகள்**

| | | |
|---|---|---|
| 1) | படைப்பாக்கத்திறன் | - 04 புள்ளிகள் |
| 2) | கற்பனையும் நுட்பமும் | - 04 புள்ளிகள் |
| 3) | பொருத்தப்பாடு | - 04 புள்ளிகள் |
| 4) | வர்ணம், சமநிலை | - 04 புள்ளிகள் |
| 5) | நேர முகாமைத்துவம் | - 04 புள்ளிகள் |
| | **மொத்தம்** | - 20 புள்ளிகள் |

**செய்முறை – 04**

04. மரபுவழி நாடகப்பாடல் / நவீன நாடகப் பாடல் / சிறுவர் நாடகப் பாடலைப் பாடி / ஆடி நடித்துக் காட்டுக.

மரபுவழி நாடகப் பாடலுக்கும் நவீன நாடகப் பாடலுக்கு இடையிலான வேறுபாடுகளைக் கூறுக.

**கணிப்பீட்டு நியதிகள்**

| | | |
|---|---|---|
| 1) | சித்திரிப்புத் திறன்கள் | - 04 புள்ளிகள் |
| 2) | பாத்திரப் பண்பு வெளிப் பயன்பாடு | - 04 புள்ளிகள் |
| 3) | அரங்க வெளிப்பயன்பாடு | - 04 புள்ளிகள் |
| 4) | பாடும் திறன் | - 04 புள்ளிகள் |
| 5) | வாய்வழிப் பதில்கள் | - 04 புள்ளிகள் |
| | **மொத்தம்** | - 20 புள்ளிகள் |

**செய்முறை – 05**

05. அ) விதந்துரைக்கப்பட்ட சிறுகதைகளில் ஒன்றினை தெரிவுசெய்து, குழுவாக நாடக ஆற்றுகையாக மாற்றுக.

ஆ) சிறுகதையை நாடகமாக மாற்றும்பொழுது ஏற்படுத்தப்படும் மாற்றங்களை பட்டியற்படுத்துக.

இ) குறித்த ஆற்றுகைக்கு பொருத்தமான காட்சியமைப்பினை வரைந்து காட்டுக.

**கணிப்பீட்டு நியதிகள்**

| | | |
|---|---|---|
| 1) | சம்பவங்களின் கோர்வை | - 04 புள்ளிகள் |
| 2) | நடிப்புத்திறன் | - 04 புள்ளிகள் |
| 3) | வெளிப்பயன்பாடு | - 04 புள்ளிகள் |
| 4) | பட்டியல்படுத்தல் | - 04 புள்ளிகள் |
| 5) | காட்சியமைப்பு வரைதல் | - 04 புள்ளிகள் |
| | **மொத்தம்** | - 20 புள்ளிகள் |

The National e-learning Portal for The General Education